அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6

மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு மார்ச் 2020

விடைக்குறிப்புகள் – வரலாறு (புதிய பாடத்திட்டம்)

மொத்த மதிப்பெண் : 90

குறிப்பு–

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. பகுதி – I ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## பகுதி–I

(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி 20x1=20

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| | | |
|---|---|---|
| 1 | இ | 1835 |
| 2 | அ | W.C.பானர்ஜி |
| 3 | ஆ | பக்கிம் சந்திர சட்டர்ஜி – ஆனந்த மடம் |
| 4 | ஈ | ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ் |
| 5 | இ | அன்னிபெசன்ட் |
| 6 | ஈ | முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. |
| 7 | ஈ | எஸ்.ஏ.டாங்கே |
| 8 | அ | பாரசீகம் |
| 9 | அ | கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது |
| 10 | அ | வெள்ளையனே வெளியேறு இயக்கம் |
| 11 | ஆ | ஜவஹர்லால் நேரு |
| 12 | அ | ஜான்சி ராணி படைப்பிரிவு |
| 13 | இ | பம்பாய் |
| 14 | ஈ | ஆந்திரா |
| 15 | ஆ | 1833 |
| 16 | ஆ | ஜெர்மனி |
| 17 | ஈ | ஜப்பான் |
| 18 | இ | ஜார்ஜ் ஆர்வெல் |
| 19 | ஈ | (4), (3), (2), (1) |
| 20 | இ | டிசம்பர் 8, 1991 |

QB365-Question Bank Software

பகுதி – II

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். 7 x 2 = 14
வினா எண். 30–க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

(ஏதேனும் 2 குறிப்புகள்)

| | | |
|---|---|---|
| 21 | **மிதவாதிகளின் இறைஞ்சுதல் கொள்கை:**<br>1. மிதவாதிகளின் கவனமான அணுகுமுறை ஆங்கிலேயரிடம் மன்றாடுதல், மனு சமர்ப்பித்தல் போன்றவையே மிதவாதிகளின் இறைஞ்சுதல் கொள்கை என அழைக்கப்படுகிறது.<br>2. இதை தீவிரவாதிகள் அல்லது முற்போக்காளர்கள் அல்லது போர்க்குணம் மிக்கவர்கள் எதிர்த்தனர். | 2 |
| 22 | **பகிஷ்கிரித் ஹிட்டாகரினி சபா:**<br>1. அம்பேத்கர் புதிய பத்திரிக்கைகள் மற்றும் அமைப்புகளை தோற்றுவித்தார்.<br>2. மூக் நாயக் (வாய்ப்பேச முடியாதவர்களின் தலைவர்) என்ற பத்திரிக்கையை தனது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக தோற்றுவித்தார்.<br>3. பகிஷ்கிரித் ஹிட்டாகரினி சபை (தனித்து விடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு) என்ற அமைப்பை தனது செயல்பாடுகளுக்காகவும் அவர் தொடங்கினார். | 2 |
| 23 | **ஆகஸ்ட் கொடையின் சிறப்பு:**<br>1. வரையறுக்கப்படாத ஒரு தேதியில் டொமினியனின் அந்தஸ்து, அதிகமான இந்தியர்களைக் கொண்டு அரசு பிரதிநிதியின் குழுவை உருவாக்குதல்.<br>2. இந்திய உறுப்பினர்களைக் கொண்ட போர் ஆலோசனை குழுவை உருவாக்குதல்.<br>3. போருக்குப் பின் இந்திய மக்கள் தங்களுக்கென்ற ஒரு அரசியல் சாசனத்தை இயற்ற உறுதியளித்தல் ஆகும். | 2 |
| 24 | **ஜவஹர்லால் நேரு தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முன்னிருந்த முக்கிய கடமைகள்:**<br>1. ஏற்றத்தாழ்வுகளை குறைப்பது, சுரண்டலை ஒழிப்பது, செல்வம் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை தடுப்பது ஆகியவையாகும்.<br>2. சமூக நீதியானது அனைத்து குடிமக்களும் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சம வாய்ப்பை பெறுவதாகும்.<br>3. இது முக்கியமாக வளர்ச்சி தொடர்பான செயல்பாடுகளில் அரசின் செயல்திறன் மிக்க பங்கேற்பை இன்றியமையாததாக ஆக்குகிறது. | 2 |
| 25 | **இரவலர் சட்டங்கள்:**<br>1. பிரிட்டனில் எலிசபெத் அரசியின் ஆட்சிக் காலத்தில் இரவலர் சட்டங்கள் இயற்றப்பட்டன.<br>2. இதன் மூலமாக வயது முதிர்ந்தோருக்கும், நோயாளிகளுக்கும், ஏழை சிறார்களுக்கும்,ஆற்றலிருந்தும் வேலை வாய்ப்பில்லாமல் தவித்தோருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது. | 2 |



QB365-Question Bank Software

| | | |
|---|---|---|
| 26 | மூன்றாவது ரெய்ச்:<br>1. மூன்றாவது ரெய்ச் என்று குறிப்பிடப்படுவது ஹிட்லரின் நாஜி அரசு ஆகும்.<br>2. ஜெர்மனியில் முதல் உலகப் போருக்குப் பின்பு ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற மக்களாட்சி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.<br>3. ஜெர்மனி முழுமையாகவே ஒரு மையப்படுத்தப்பட்ட அரசாக மாற்றப்பட்டது. | 2 |
| 27 | பன்னாட்டு சங்கத்திலிருந்து 1933ம் ஆண்டில் ஜெர்மனி ஏன் வெளியேறியது:<br>1. ஹிட்லர் பதவியேற்ற 1933–ம் ஆண்டு ஜெனிவாவில் பன்னாட்டு சங்கம் ஆயுதக் குறைப்பு மாநாடு ஒன்று நடத்தியது.<br>2. பிரான்சிற்கு இணையாக ஜெர்மனியும் மறு ஆயுதமயமாக்கல் கோரிக்கை விடுத்ததே பிரச்சனையாக எழுந்தது. பிரெஞ்சுக்காரர்கள் இந்த கோரிக்கைக்கு உடன்பட மறுத்துவிட்டனர்.<br>3. பிரான்சின் மறுப்பிற்கு பதிலடியாக ஹிட்லர் அம்மாநாட்டின் இருந்தும் பன்னாட்டு சங்கத்தில் இருந்தும் ஜெர்மனியை விலக்கிக் கொண்டார். | 2 |
| 28 | நான்கிங் ஒப்பந்தத்தின் முக்கியத்துவம்:<br>1. முதல் அபினிப் போரின் இறுதியில் நான்கிங் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.<br>2. நான்கிங் உடன்படிக்கை பிரிட்டனுக்கு சீனாவின் கதவுகளை திறந்து விட்டது.<br>3. சீனா ஹாங்காங்கை விட்டுக் கொடுத்ததோடு இழப்பீடாக ஒரு தொகையையும் வழங்கியது. | 2 |
| 29 | கோமிங்பார்ம்:<br>1. சோவியத் ரஷ்யா 'கோமிங்பார்ம்' என்னும் அமைப்பை 1947, செப்டம்பரில் உருவாக்கியது.<br>2. இவ்வமைப்பில் ஐரோப்பிய நாடுகளின் அனைத்து கம்யூனிஸ்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர்.<br>3. கம்யூனிஸ்டு அல்லாத நாடுகளுடனான வணிக உறவுகளை தடுக்க முயன்றது.<br>4. மார்ஷல் திட்டத்திற்குப் பதிலாக இது ஏற்படுத்தப்பட்டது. | 2 |
| 30 | சீட்டோ:<br>1. 1954–செப்டம்பரில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை என்னும் அமைப்பு நிறுவப்பட்டது.<br>2. சீட்டோ எனும் இவ்வமைப்பு ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் நேட்டோவின் பிரதிநிதியாக அமைந்ததாகும்<br>3. இதன் தலைமையிடம் பாங்காங்கில் செயல்பட்டது. சீட்டோ ஒரு ஆலோசனை மன்றமாக மட்டுமே செயல்பட்டது.<br>4. சீட்டோ 1977–ல் கலைக்கப்பட்டது. | 2 |

பகுதி – III

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். 7 x 3 = 21
வினா எண். 40–க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

(ஏதேனும் 3 குறிப்புகள்)

| | | |
|---|---|---|
| 31 | பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிக்கைகளின் பங்கு<br>1. தன்னாட்சி, மக்களாட்சி, குடிமை உரிமைகள், தொழில்மயமாக்குதல் போன்ற நவீன சிந்தனைகளை பரப்ப மக்களுக்கு உதவியது.<br>2. பத்திரிக்கைகள், அரசியலை விமர்சனம் செய்யத் தொடங்கின.<br>3. நாட்டினைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து மக்களிடம் பேசின.<br>4. மக்கள் நலன் சார்ந்த முக்கிய பொது விஷயங்களை மக்களுக்கு கற்றுக் கொடுப்பதில் முற்போக்கான பங்காற்றின. | 3 |
| 32 | காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடக் காரணமான சூரத் மாநாட்டின் செயல்முறைகள்<br>1. கல்கத்தா மாநாட்டு முடிவுகளால் மிதவாத தேசியவாதிகள் அச்சம் கொண்டு மாநாட்டை சூரத் நகருக்கு மாற்றினர்.<br>2. மிதவாத தேசியவாதிகளின் வேட்பாளரான ராஷ்பிகாரி கோஷ் என்பாருக்கு எதிராக தீவிர தேசியவாதிகள் லாலா லஜபதிராயின் பெயரை முன்மொழிந்தனர்.<br>3. இயக்கத்தில் பிளவு ஏற்படுவதை தவிர்ப்பதற்காக லாலா லஜபதிராய் போட்டியிட மறுத்தார்.<br>4. இறுதியில் மாநாடு குழப்பத்தில் முடிந்தது. | 3 |
| 33 | அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம்<br>1. அரவிந்த் கோஷ், அவரின் சகோதரர் பரிந்தர் குமார் கோஷ் அவர்களுடன் மேலும் 35 நபர்களை கைது செய்யப்பட்டனர்.<br>2. சித்தரஞ்சன் தாஸ் இவ்வழக்கில் புரட்சிகர தேசிய வாதிகளுக்காக வாதாடினார்.<br>3. ஆங்கில ஆட்சிக்கு எதிராக அரவிந்த் கோஷ் சதியில் ஈடுபட்டார் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என வழங்கப்பட்ட தீர்ப்பால் அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டார்.<br>4. புரட்சிகர தேசியவாதிகள் கதாநாயகர்களாக சித்தரிக்கப்பட்டனர். | 3 |
| 34 | பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்தும்<br>1. அம்பேத்கார் மற்றும் காந்தியடிகளுக்கு இடையே ஏற்பட்ட புதிய ஒப்பந்தம் பூனா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது.<br>2. தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதிகளை பிரித்துக்கொண்டாலும் இடங்களின் ஒதுக்கீடு குறித்து உத்திரவாதம் அளிக்கப்பட்டது.<br>3. இட ஒதுக்கீடு பெற்ற தொகுதிகள் என்ற சட்ட அம்சம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டு திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன.<br>4. சுதந்திர இந்தியாவின் அரசியல் சாசனத்திலும் இது இடம் பெற்றது. | 3 |

| | | |
|---|---|---|
| 35 | பஞ்சசீலக் கொள்கை<br>1. இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று அவற்றின் நல எல்லை மற்றும் இறையாண்மையை மதித்து நடத்தல்.<br>2. இரு நாடுகளும் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்.<br>3. ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள் நிகழ்வுகளில் தலையிடாமல் இருந்தல்.<br>4. இரு நாடுகளுக்கு இடையே சமத்துவம், ஒன்றுக்கொன்று பயனடைய கூட்டுறவு.<br>5. சமாதான சக வாழ்வு. | 3 |
| 36 | **இந்திய வேளாண்மையில் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள்**<br>1. வேளாண்மையின் பின்தங்கிய நிலையை இரு காரணிகளோடு தொடர்புபடுத்தி பார்க்கலாம்.<br>2. ஒன்று நிறுவன அடிப்படையிலானது, மற்றுறொன்று தொழில்நுட்பம் சார்ந்தது ஆகும்.<br>3. நிறுவனம் சார்ந்த காரணிகள் என்பது நில உடைமை வர்க்கத்தைசேர்ந்தோருக்கும் விவசாய தொழிலாளர் வர்க்கத்தை சேர்ந்தோர்க்கும் இடையே நிலவிய சமூக பொருளாதார உறவுகளை குறிப்பதாகும்.<br>4. தொழில்நுட்பக் காரணிகள் என்பது சிறந்த விதைகள் மேம்படுத்தப்பட்ட வேளாண்மை முறைகள் ரசாயண உரங்களை பயன்படுத்துதல் உள்ளிட்ட நீர்ப்பாசன வசதிகள் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும். | 3 |
| 37 | **ஏழைமக்களும் உழைக்கும் வர்க்கமும் ஏற்றம் பெற பாரிஸ் கம்யூன் எடுத்த நடவடிக்கைகள்**<br>1. அடுமனையில் இரவு பணியை தடை செய்தது.<br>2. தொழில் பட்டறைகளோ, தொழிற்சாலைகளோ உரிமையாளரால் மூடப்பட்டிருந்தால் அதனை தொழிலாளர்களைக் கொண்டு திறக்க செய்தல்.<br>3. விதவைகளுக்கு ஓய்வூதியம் வழங்கவும், குழந்தைகளுக்கு கட்டணமில்லா கல்வியை கொடுக்கவும் வகை செய்தது.<br>4. முற்றுகை காலத்தில் வாங்கப்பட்ட கடன்களை வசூலிக்க விடாமல் தடுத்தும் கம்யூன் தனது நடவடிக்கையில் இறங்கியது. | 3 |
| 38 | **இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகள்**<br>• ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளின் பெரும் துறைமுகங்கள் அழிக்கப்பட்டன<br>• சுமார் 6 கோடி மக்கள் உயிரிழந்தனர்<br>• ஜெர்மனி தனது செல்வாக்கை இழந்தது<br>• மன்னராட்சி முறை ஐரோப்பாவில் வீழ்ச்சியடைந்தது<br>அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன்கள் உலக வல்லரசாயின | 3 |
| 39 | **இந்தோனேஷிய விடுதலைக்கு சுகர்னோ ஆற்றிய பங்கு**<br>1. சுகர்னோ என்ற இளம் பொறியாளர் இந்தோனேஷிய தேசிய கட்சியை நிறுவினார்.<br>2. 1931–ம் ஆண்டு காவல்துறை இதன் தலைமை அலுவலகத்தை சோதனைக்கு உட்படுத்தியது. சுகர்னோ கைது செய்யப்பட்டு அவரது | 3 |

QB365-Question Bank Software

| | | | |
|---|---|---|---|
| | | கட்சியும் கலைக்கப்பட்டது.<br>3. சுகர்னோவும் பிற தேசியவாத தலைவர்களும் 1942–ம் ஆண்டு வரை சிறையில் வாடினர்.<br>4. சுகர்னோ, ஹட்டா போன்ற தலைவர்களால் வழி நடத்தப்பட்ட சிலர் விடுதலை அடைய சிறந்த வழி ஜப்பானியர்களை ஆதரிப்பதே என்று கருதினர். | |
| 40 | | **ஐரோப்பிய ஒன்றியம்**<br>1. ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தை சேர்ந்த உறுப்பினர்கள் ஒன்றிணைந்து 1991 டிசம்பரில் மாஸ்ட்ரிக் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.<br>2. இதன் வாயிலாக 1993–ல் ஒற்றைச் சந்தையுடன் ஐரோப்பிய ஒன்றியம் நிறுவப்பட்டது.<br>3. ஐரோப்பிய ஒன்றியம் உருவாக்கப்பட்ட பின்னர் ஒன்றிய உறுப்பினர்கள் வெளியுறவுக் கொள்கை உள்நாட்டு பாதுகாப்பு போன்ற ஏனைய துறைகளிலும் இணைந்து பணியாற்றினர்.<br>4. இவ்வுடன்படிக்கை ஒரே ஐரோப்பிய பணமான 'யூரோ' உருவாக்கப்படுவதற்கு வழிவகுத்தது. | 3 |

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

| | | | |
|---|---|---|---|
| 41 | அ | **இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்கு முறை மற்றும் இனவெறிக் கொள்கைகளின் காரணங்கள் (விளக்கத்துடன்)**<br>(I) 1857ம் ஆண்டு கலகம் குறித்த ஓயாத நினைவுகள்<br>(II) இனப்பாகுபாடு<br>(III) இந்தியர்களுக்கு எதிரான அடக்குமுறை<br>(IV) பிராந்திய மொழிச் சட்டம்<br>(V) இல்பர்ட் மசோதா<br>(அல்லது) | 5 |
| 41 | ஆ | **லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்: (ஏதேனும் ஐந்து குறிப்புகள்)**<br>1. நிர்வாகம் மற்றும் நிதி விஷயங்களில் மத்திய கட்டுப்பாட்டில் இருந்து மாகாணங்கள் சுதந்திரமாக செயல்பட வேண்டும்.<br>2. மத்திய மற்றும் மகாண சட்ட மேலவை உறுப்பினர்களில் 4/5 பங்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், 1/5 பங்கு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படவேண்டும்.<br>3. மகாண மற்றும் மத்திய சட்டப்பேரவைகளின் 4/5 உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.<br>4. மத்திய நிர்வாக சபைக்கு 1/ 2 பங்கு உறுப்பினர்கள் அந்தந்த சபை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர்களாக இருக்க வேண்டும்.<br>5. முஸ்லீம்களுக்கு தனித்தொகுதிகள் வழங்க காங்கிரஸ் ஒப்புக் கொண்டது.<br>6. தங்களது சபைகள் நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு ஏற்ப மாகாண மற்றும் மத்திய அரசுகள் நடக்க கடமைப்பட்டுள்ளன.<br>7. இந்திய அரசுக்கும் வெளியுறவு அமைச்சருக்கும் மற்றும் காலனி செயலருக்கும் உள்ள உறவுகளும் ஒத்திருக்க வேண்டும். | 5 |



QB365-Question Bank Software

| | | | |
|---|---|---|---|
| 42 | அ | ஒத்துழையாமை இயக்கம் நடைமுறைபடுத்திய சூழலும் அதன் விளைவுகளும்<br>நடைமுறைபடுத்திய சூழல்கள்<br>• 1920 கல்கத்தா காங்கிரஸ் மாநாடு<br>• பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள், சட்டப்பேரவை புறக்கணிப்பு<br>• அரசு வழங்கிய பட்டங்கள், விருதுகளைத் துறத்தல்<br>• வரிகொடா இயக்கம், சட்ட மறுப்பு இயக்கத்தினை போராட்டத்துடன் இணைத்தல்<br>• 4 அனா கட்டணத்தில் கிராம மக்களை காங்கிரசில் சேர்த்தல்<br>ஒத்துழையாமை இயக்கத்தின் விளைவுகள்<br>• பள்ளிகள் மற்றும் வித்யா பீடங்கள் நிறுவப்பட்டன<br>• வேல்ஸ் இளரசர் பயணம் புறக்கணிக்கப்பட்டது<br>• தொழிலாளர்கள், விவசாயிகளின் வேலைநிறுத்தம்<br>• அரசு அடக்குமுறைகளை கையாளுதல்<br>(அல்லது) | 5 |
| 42 | ஆ | பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் (விளக்கத்துடன்)<br>(I) பகத்சிங்கின் ஆரம்பகால போராட்டங்கள்<br>(II)பகத்சிங்கின் குண்டு வீச்சு<br>(III) லாகூர் சதி வழக்கு<br>(IV)பகத்சிங் தூக்கிலிடப்படுதல் | 5 |
| 43 | அ | ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம்<br>1. கூட்டு இந்திய அடையாளம் ஒன்று உருவாவதை தடுப்பதே பிரிட்டிஷாரின் நோக்கமாகும்.<br>2. பிரிட்டிஷ் அரசு வகுப்புவாத அரசியலுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் அளித்தது.<br>3.அனைத்து கட்சிகளும் குறுகிய வகுப்புவாத அணுகுமுறை.<br>4. இந்து முஸ்லீம் பகைமை.<br>5.19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்து முஸ்லீம் கலவரங்கள்.<br>6. பிரிட்டிஷ் அரசு வகுப்புவாதத்தை வளர்ப்பதற்கு தனித்தொகுதி முறையை நடைமுறைப்படுத்தல்.<br>7.இந்து தேசியம் இஸ்லாமிய தேசியம் என்ற கருத்து பிரிவினைக்கு இட்டுச் சென்றது.<br>(அல்லது) | 5 |
| 43 | ஆ | சுதந்திரபோராட்டத்தை இந்திய தேசிய இராணு விசாரணை தீவிரபடுத்திய விதம் (ஏதேனும் ஐந்து குறிப்புகள்)<br>1. டெல்லியில் செங்கோட்டையில் இந்திய தேசிய இராணுவத்தின் மீது நடத்தப்பட்ட விசாரணையில் 1920–ல் தனது சட்டப்பணிகளைத் துறந்து ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திய தேசிய இராணுவ வீரர்களின் சார்பில் ஆஜராகி வாதாடினார்.<br>2. இந்திய தேசிய காங்கிரசும் நேரடியாக மக்களை திரட்டுவதற்காக நாடு முழுவதும் பொது கூட்டங்களை நடத்தியது. | 5 |

QB365-Question Bank Software

| | | | |
|---|---|---|---|
| | | 3 இந்திய தேசிய இராணுவத்தின் அதிகாரிகளான ஷாநவாஸ்கான், ஷெகல், G.S.தில்லான் ஆகியோரின் மீது தனி விசாரணையை மேற்கொண்டது.<br>4. இந்திய நாட்டின் பத்திரிக்கைகட்ள இவ்விசாரணையை உணர்ச்சிகரமாக பிரசுரித்தது.<br>5. இந்திய தேசிய இராணுவ வாரம் கடைபிடிக்கப்பட்ட போது கடையடைப்புகளும், ஊர்வலங்களும் நடந்தேறின.<br>6. இம்மூன்று அதிகாரிகளை தேர்ந்தெடுத்து விசாரணை செய்தது மூலம் அனைத்து அரசியல் கருத்துப் பிரிவினைகளும் ஓரணியின் கீழ் வர வழியேற்பட்டது.<br>7. இந்திய தேசிய இராணுவத்தின் மீதான விசாரணை 1946–ல் இந்திய தேசிய இயக்கத்தின் மற்றொரு முக்கிய நிகழ்வுக்கு எடுத்துச் செல்ல மேடையமைத்தது. **(ஏதேனும் 5 குறிப்புகள்)** | |
| 44 | அ | **1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறு சீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகள்:**<br>1. இந்திய தேசிய காங்கிரஸ் 1920ம் ஆண்டு நாக்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் மொழிவாரி மாகாணம் அமைக்கப்படுவதன் மூலம் தேசிய அடையாளம் பாதுகாக்கப்படும் என்று உறுதியளித்தது.<br>2. 1928 வெளியீன நேரு அறிக்கையின்படி மாநிலங்களை மொழிவாரியாக மறு சீரமைக்க கோரியது.<br>3. 1945ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் மொழிவாரி மாகாணங்கள் பற்றிய கருத்து இடம் பெற்றது.<br>4. 1948ல் இராஜேந்திர பிரசாத் மொழிவாரி மாகாணங்கள் ஆணையத்தை அமைத்தார்.<br>5. 1948தல் ஆணையத்தின் அறிக்கை மொழிவாரி மாகாண மறு சீரமைப்பை எதிர்த்தது.<br>6. மொழிவாரி மாகாண கோரிக்கையை ஆராய்வதற்கு ஜே.வி.பி. குழு அமைக்கப்பட்டது.<br>7. 1949ல் ஜே.வி.பி. குழு மொழிவாரி மாகாண மறு சீரமைப்பை தள்ளி வைத்தது.<br>8. 1952ல் பொட்டி ஸ்ரீராமலு தனி ஆந்திரா கேட்டு உண்ணாவிரதம்.<br>9. 1955ல் பசல் அலி தலைவராக மாநில மறு சீரமைப்பு ஆணையம் அறிக்கை அளித்தது.<br>10. 1956ல் மாநில மறு சீரமைப்பு சட்டம் இயற்றப்பட்டது.<br>**(அல்லது)** | 5 |
| 44 | ஆ | **சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம்**<br>**(I) எழுத்தறிவு நிலை உயர்வு**<br>• ஆண்கள் 82% பெண்கள் 65 %<br>**(II) கல்வி மையம் அதிகரிப்பு**<br>• 12.72 இலட்சம் தொடக்கப்பள்ளி<br>• 2.45 இலட்சம் மேல்நிலைப்பள்ளி<br>• 38498 கல்லூரிகள்<br>• 43 மத்திய பல்கலைக்கழகம்<br>• 316 மாநில பல்கலைக்கழகம் | 5 |



QB365-Question Bank Software

QB365-Question Bank Software

| | | | |
|---|---|---|---|
| | | (III) இடைநிற்றல் நீக்கம்<br>• அனைவருக்கும் கல்வி திட்டம் (SSA)<br>• அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டம் (RMSA)<br>• ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம் (சமக்ர சிக்ஷா அபியான்) | |
| 45 | அ | இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்கு<br>(I) இலக்கியத்தில் மறுமலர்ச்சி (விளக்கத்துடன்)<br>(II) கலையில் மறுமலர்ச்சி<br>(III) அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் மறுமலர்ச்சி<br>(அல்லது) | 5 |
| 45 | ஆ | தொழிற் புரட்சியின் துவக்கம் மற்றும் நவீன சமூகத்தின் மீது அதன் தாக்கம் (ஏதேனும் 5 குறிப்புகள் விளக்கத்துடன்)<br>(I) வணிகப் புரட்சியின் தாக்கம்<br>(II) காலனி ஆதிக்கம்<br>(III) சந்தைகளின் விரிவாக்கம்<br>(IV) மூலதனம்<br>(V) அரசியல் உறுதித் தன்மை<br>(VI) மூல வளங்கள்<br>(VII) வேளாண்மையில் ஏற்பட்ட முன்னேற்றம்<br>(VIII) கடற்கரைப் பகுதியில் ஆதிக்கம்<br>(IX) புவியியல் அமைப்பு<br>(X) தட்ப வெப்ப நிலை<br>சமூகத்தின் மீது அதன் தாக்கம்<br>• மக்களின் வாழ்க்கை முறை மாறியது<br>• உற்பத்தி பெருகியது<br>• கைவினைத் தொழில்கள் அழிந்தன<br>முதலாளிகள் தொழிலாளிகள் என்ற வர்க்க பேதம் ஏற்பட்டது. | 5 |
| 46 | அ | 1838ம் ஆண்டு மக்கள் பட்டயம்<br>லண்டனில் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த வில்லியம் லாவெட் இதை வெளியிட்டார். அவை,<br>• அனைவருக்கும் வாக்குரிமை<br>• வாக்குச் சீட்டுகள் மூலம் வாக்களித்தல்<br>• வேட்பாளர்களுக்கு சொத்து தகுதியை நீக்குதல்<br>• ஏழைகள் தேர்தலில் போட்டியிடுவதற்காக நிதி சலுகைகளை வழங்குதல்<br>• சம அளவிலான பிரதிநிதிகளை வழங்குதல்<br>• வருடாந்திரப் பாராளுமன்றம்<br>(அல்லது) | 5 |
| 46 | ஆ | பன்னாட்டு சங்கத்தின் வெற்றி தோல்விகள்<br>பன்னாட்டு சங்கத்தின் வெற்றிகள்<br>(I) ஆலந்து தீவுகள் பிரச்சனை தீர்வு<br>(II) மேல்புற சைலேசியா சிக்கல் தீர்வு<br>(III) கிரீஸ் பல்கேரியா பிரச்சனை தீர்வு | 5 |



QB365-Question Bank Software

QB365-Question Bank Software

| | | | |
|---|---|---|---|
| | | (IV) சர்வதேச அபின் பரிமாற்றம் குறைத்தல்<br>(V) ஆபத்தான நோய் பரவலைத் தடுத்தல்<br>**பன்னாட்டு சங்கத்தின் தோல்விகள்**<br>• ஐரோப்பிய இராஜதந்திரத்தின் மையமாக இது விளங்கியது<br>• இதற்கென்று தனி இராணுவ அமைப்பு இல்லாதது<br>• இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகள் சங்க கட்டளைக்கு பணிய மறுத்தது<br>• பிரிட்டன் மற்றும் பிரான்சின் ஆதிக்கம்<br>• இந்த அமைப்பு வில்சனின் சிந்தனையில் உதித்த ஒன்று | |
| 47 | அ | 1. உலக வரைபடத்தில் வாஸ்கோடகாமாவின் கடல்வழி பயணத்தை வரைதல் | 2 |
| | | 2. மூன்று இடங்களை வரைபடத்தில் குறித்தல் | 3 |





QB365-Question Bank Software

| | | | |
|---|---|---|---|
| 47 | ஆ | அமெரிக்க விடுதலைப்போர்– காலக்கோடு (ஏதேனும் ஐந்து நிகழ்வுகள்)<br>1756– ஏழாண்டுபோர் தொடக்கம்<br>1763– ஏழாண்டுபோர் முடிவு<br>1764–சர்க்கரை மீது வரிவிதிப்பு<br>1765–முத்திரைச் சட்டம்<br>1766– டவுண்ஷென்ட் சட்டம்<br>1770– பாஸ்டன் படுகொலை<br>1773– பாஸ்டன் தேனீர் விருந்து<br>1774–பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள்<br>1774–முதல் கண்டமாநாடு<br>1775– இரண்டாம் கண்டமாநாடு / பங்கர் போர்<br>1776– சுதந்திர பிரகடனம்<br>1777–சரடோகா போர்<br>1781–யார்க் டவுண் போர்<br>1783–பாரிஸ் உடன்படிக்கை/ அமெரிக்காவிடுதலை | 5 |